முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.09.2022**, திங்கட்கிழமை

1. மானுட சமூகத்தை வழிநடத்தி
   மரணம் வெல்லும் சக்தி அருள
   ஞானம் தரும் ஆறுமுக அரங்கனே
   ஞானியே உன் தவம் மெச்சி
2. மெச்சியே அனுகூல ஆசிதனை
   மகான் அகத்தியரும் உரைப்பேன்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 02ம் நாள், 19.09.2022 திங்கட்கிழமை)
   அச்சமிலா மனபலம் அடைய
   ஆன்மா தெளிவுதிடமும் காண
3. காணவே கலியுக மக்களுக்கு
   கந்தப்பெருமான் அவதாரமான
   ஞான தேசிகனின் அனுகூலமதும்
   ஞானமாகக் கிடைத்துவிட சித்தி உண்டு
4. உண்டாகும் ஊழை வெல்லும் சக்தி
   உலகையே ஆளும் சக்தி
   கண்டடைவர் அரங்கன் தயவால்
   கலிதானும் உலகை வருத்திவர
5. வருகின்ற காலம் கடுமையானது
   வதைகள் இன்னும் கூடியே
   தருகின்ற குணங்களில் தடை
   தன்னலம் கொண்டு பிறரை கெடுக்கும்
6. கெடுக்கும் பாவச் செயல்கள்
   கொடுங்கோல் ஆட்சி போல்
   இடர்கள் அழிவாக மிஞ்சயிருக்க
   இருக்கின்ற காலம் ஆபத்தானது
7. ஆதலால் நல்லோர்கள் ஆசி
   ஆறுமுகனார் அனுகிரகம்
   பூதலத்தில் மக்கள் தேடிஅடைந்து
   புண்ணிய வழிக்குள் வர வேண்டும்
8. வேண்டிவர எங்கும் வழிபாடு
   வேலவனார் தலைமை ஏற்ற
   தொண்டு கலந்த மார்க்கமாக
   தேசிகன் அனுகூலம் அடைந்து வர
9. வருகின்ற மக்களின் பலம்
   வளரவளரவே மாற்றமதை
   ஆறுமுகக் கடவுளும் கலியில்
   அனுகிரகமாக இறங்கி காட்சி

10. காட்சிதனை மக்களுக்கு வழங்கி
    கட்டாயம் ஞான வழி மாற்றம்
    மாட்சிமைபட எங்கும் நிகழ்த்தி
    மக்களுக்குப் பாதுகாப்பு கூடும்
11. கூடுமே பொது நல நோக்கும்
    குறைவின்றி செயல்வடிவமாகி
    நாடெங்கிலும் மாற்றம் சேவைபட
    ஞான ஆட்சிக்காலமாகச் சிறக்கும்

அகத்தியரின் அனுகூல ஆசி முற்றே

–சுபம்–